00460

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
## மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
## சட்டக் கற்கைகள் திணைக்களம்
## சட்டமாணி பட்டப்படிப்புத்திட்டம் - மட்டம் 3
## இறுதிப் பரீட்சை -2017/2018
## LWU 1411/LLU3703 – இலங்கை சட்டங்களுக்கான அறிமுகம்
## காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 28-02-2020 நேரம் : மு.ப 09.30 - பி.ப 12.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை - 08

ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1. சிவனேசன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு மலாயாவில் மகனாகப் பிறந்தான். யாழ்ப்பாணத்தில் அவனது பாடசாலைக் கல்வியை பூர்த்திசெய்த பின்பு கொழும்பிற்கு உயர் கல்விக்காக வருகை தந்ததுடன் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்திற்கு பிரவேசித்தான். 2001 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட பின்பு அவன் சட்டத்தரணியாக பணிபுரிய ஆரம்பித்தான். 2003 ஆம் ஆண்டு அவன் படித்த அதே பல்கலைக்கழத்தில் படித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராதா என்ற ஆசிரியராக பணி புரிந்தவளை திருமணம் முடித்தான். அவர்களுடைய திருமண வைபவம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. தமது தொழிலை மேற்கொள்வதற்காக இருவரும் கொழும்பில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். இருவரும் வெள்ளவத்தையில் உள்ள இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி பயின்றனர். ராதா மற்றும் சிவனேசன் ஆகிய இருவருடைய பெற்றோரும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகின்றனர். சிவனேசனுடைய குடும்பம் ஒவ்வொரு மாதமும் யாழ்ப்பாணத்திற்கு சென்று வருவது வழக்கமாக இருந்தது. சிவனேசன் யாழ்ப்பானத்தில் காணிகளையும் ஏனைய ஆதனங்களையும் கைக்கொண்டிருந்தான். அவன் தன்னுடைய பெற்றோர்களுடைய மூதாதையர் வீட்டுக்கருகில் வீடு ஒன்றைக் கட்ட திட்டமிட்டிருந்தான். சிவனேசன் விபத்தொன்றை சந்தித்து 2019 ம் ஆண்டு இறந்தான்.

   சிவனேசன் தனது சகோதரன் கமலேசனுடன் சாவகச்சேரியில் ஒரு நிலத்தை கூட்டு சொந்தங் கொண்டிருந்தான். கமலேசன் 2018 ஆம் ஆண்டு சிவனேசனுக்கு அறிவிக்காது குறிப்பிட்ட காணியை விற்றான்.

   ராதா, தன்னையும் மற்றும் சிவனேசனையும் ஆளும் சட்டங்களையும், சாவகச்சேரியில் உள்ள காணி தொடர்பான சட்ட பிரச்சினைகளையும் பற்றி தெரிந்து கொள்ள விரும்புகின்றாள்.

   ராதாவுக்கு ஆலோசனை வழங்குக.

   இயைபான தீர்ப்புச் சட்டம் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகளுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

   (20 புள்ளிகள்)

2. பின்வரும் வழக்குகளில் தொடர்புபட்ட திறத்தவர்களை ஆளும் விசேட சட்டங்களுக்கு அவதானம் வழங்கி இவ்வழக்குகளின் முக்கியத்துவத்தை விளக்குக.

(அ) *வில்லியம் எதிர் ரொபட்சன்*( 1886) 8. S.C.C. 36 (06 புள்ளிகள்)

(ஆ) *சிவஞானலிங்கம் எதிர் சுந்தரலிங்கம்* (1988) 1 Sri L

(07 புள்ளிகள்)

(இ) *நடாலிய மானெல் அபேசுந்தர எதிர் கிறிஸ்டோபர் அபேசுந்தர* (1978) 1 Sri L.R 185

(07 புள்ளிகள்)

3. தேவிந்த என்பவன் மாத்தளையில் உள்ள வலய கல்வி காரியாலயத்தில் கல்வி பணிப்பாளராக கடமையாற்றுகின்றான். அவனுடைய தந்தை கிரிபண்டா ஒரு விவசாயி ஆவான். அவன் தேவிந்தவின் தாயான அம்பலங்கொடையை சேர்ந்த சந்திராணியுடன் கம்பளையில் வசித்து வருகிறான். அவர்கள் 1948 ம் ஆண்டு திருமணம் முடித்தனர். மாத்தளை சயன்ஸ் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியையான உதாரியை தேவிந்த சந்தித்தான். உதாரியினுடைய பெற்றோர் நுகெகொடையில் வசித்து வருகின்றனர். இரண்டு வருட காதல் தொடர்ந்த பின்பு, தேவிந்த உதாரியை திருமணம் முடிக்க தீர்மானித்தான். தேவிந்தவினுடைய பெற்றோர் திருமணத்தை கண்டிய சட்டத்தில் பதியுமாறு கூறினர். ஆனால் உதாரியின் பெற்றோர் திருமணத்தை பொதுச் சட்டத்தின் கீழ் பதியுமாறு வேண்டினர். தேவிந்த மற்றும் உதாரி ஆகியோர் தமது திருமணத்தை கண்டியச் சட்டம் மற்றும் பொதுச் சட்டத்தின் கீழ் பதிவதற்கான சாத்தியப்பாடு பற்றி தெளிவுபெற விரும்புகின்றனர்.

(அ) மேலே தரப்பட்ட சூழ்நிலையை ஆராய்ந்து கிரிபண்டா , சந்திராணி , தேவிந்த ஆகிய ஒவ்வொரு திறத்தவருக்கும் பிரயோகமாகும் சட்டங்களை இனங்காண்க.

(10 புள்ளிகள்)

(ஆ) கண்டியச் சட்டத்தின் கீழ் அவர்களுடைய திருமணத்தை பதிவதற்கான சாத்தியப்பாட்டை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) தேவிந்தவினுடைய தந்தை கரையோர சிங்களவராகவும் தாய் கண்டியப் பெண்ணாகவும் இருந்து 1950 ஆம் ஆண்டு அவர்கள் பின்ன திருமணம் ஒன்றை மேற்கொண்டிருந்தால் பிரிவு (ஆ) விற்கு வழங்கிய உமது விடை வேறுபடுமா?

(05 புள்ளிகள்)

4. "இந்தக்கட்டளைச் சட்டத்தினால் அல்லது இலங்கையில் அமுலில் இருக்கின்ற வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் நீதித் துறை நடவடிக்கையின் போது எழுகின்ற சான்று தொடர்பான வினாவிற்கு ஏற்பாடு ஒன்று இல்லாத போது, அத்தகைய வினா அக்குறிப்பிட்ட நேரத்தில் இருக்கின்ற ஆங்கிலச் சட்டத்திற்கு அமைய தீர்மானிக்கப்படும்."

14ம் இல.1895ம் ஆண்டின் சான்று கட்டளைச் சட்டத்தின் பிரிவு 100

இந்த ஏற்பாடு பல்வேறுபட்ட முறைகளைப் பயன்படுத்தி ஆங்கியலச் சட்டம் இலங்கைக்குள் அறிமுகப்படுத்தப்பட்டமைக்கு சான்றாக அமைகிறது. பல்வேறுபட்ட முறைகளைப் பயன்படுத்தி இலங்கைக்குள் சட்டவாக்கம் மூலம் ஆங்கிலச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதற்கு பயன்படுத்தப்பட்ட முறையை ஆராய்க இயைபான தீர்ப்புச் சட்டம் மற்றும் நியதிச் சட்டங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

5.(I) 'மொஹமதிய கோவை முஸ்லிம் சட்டங்களின் ஒரு பூரணமான தொகுப்பு அல்ல. அது பல இடைவெளிகளைக் கொண்டிருப்பதோடு, சட்டத்தின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கவில்லை. நீதித் துறை உரோமன் டச்சுச் சட்டம் மற்றும் இஸ்லாமிய சட்டம் ஆகிய இரண்டையும் பிரயோகிப்பதன் மூலம் இந்த பிரச்சினையை தீர்க்க முற்பட்டது.
இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் நியதிச் சட்டங்களுடன் உமது விடையை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) (அ) ரிசான் மற்றும் அஸ்ரா ஆகியோர் திருமணத்தின் போது இஸ்லாமிய நம்பிக்கையை பின்பற்றினர். அவர்களுக்கு பிள்ளைகள் இருக்கவில்லை. எனவே சானியா எனும் பிள்ளையை மகவேற்பு செய்ய

விரும்பினர். சானியாவின் திருமணத்தின் போது ரிசான் வீட்டுடன் கூடிய காணியொன்றை கொடையாக வழங்க விரும்பினான்.

(ஆ)அஸிஸ் மற்றும் பாத்திமா ஆகியோர் தமது திருமணத்தின் போது இஸ்லாமிய நம்பிக்கையை பின்பற்றினர். அஸிஸ், அஞ்சலி என்ற உரோமன் கத்தோலிக்க பெண்ணை சந்தித்து அவளை திருமணம் செய்ய தீர்மானித்தான். முதல் திருமணம் நிலைத்திருக்கும் போது அவன் உரோமன் கத்தோலிக்க மதத்தை தழுவி அஞ்சலியை திருமணம் செய்தான்.

மேலே தரப்பட்ட சூழ் நிலைகளின் கீழ் எழுகின்ற சட்ட விளைவுகளை ஆராய்க. உமது விடையினை தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் நியதிச் சட்டம் என்பவற்றின் உதவியோடு ஆதாரப்படுத்துக.

(5X2=10 புள்ளிகள்)

6. 'ஒரே நியாயாதிக்குள் முரண்பாடான சட்ட எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும் பிரயோகிக்கப்படுகின்ற போது சட்டப் பிணக்குகள் ஏற்படலாம். அவை ஆள்சார் சட்டங்களுக்கு இடையில் அல்லது ஆதிக்கம் மிக்க பொதுச் சட்டம் மற்றும் ஆள்சார் சட்டம் என்பவற்றிற்கு இடையில் எழலாம். இதே போன்று ஆதிக்கம் மிக்க பொதுச் சட்டத்திற்குள்ளும் சட்ட சிக்கல்கள் தோன்றலாம் . அதாவது உரோமன் டச்சுச் சட்டம் மற்றும் ஆங்கிலச் சட்டம்'.

மேலே தரப்பட்ட கூற்றின் பின்னணியில் , இலங்கை சட்ட முறைமையில் இருக்கக்கூடிய பன்மைத்துவ வாதம் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்க. தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் இயைபான நியதிச் சட்டங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக (20 புள்ளிகள்)

7."ஐக்கிய மாகாண அரசாங்கத்தின் கீழ் சிலோனில் உரோமன் டச்சுச் சட்டம் பிரயோகிக்கப்பட்டமை சிலோனின் 'பொதுச் சட்டத்தின்' ஆரம்ப இடமாக அது இருந்த போதிலும் அது முடிவடைந்த இடமல்ல. இங்கிலாந்தின் பொதுச் சட்டம் போன்று 1799 ம் ஆண்டில் இருந்து சிலோனுடைய பொதுச் சட்டம் நிலையாக இருக்ககில்லை. காலப் போக்கின் போது சிலோனுடைய நீதிமன்றங்கள் சிலோனில் ஏற்பட்ட மாறுகின்ற சமூக நிலைமைகளுக்கு ஏற்றவாறு தோன்றுகின்ற சட்ட பிரச்சினைக்குரிய தீர்வுகளைக் காண அதனுடைய அடிப்படை எண்ணக்கருவை பயன்படுத்தியமையால் பொதுச் சட்டம் *cursus curiae* (மீட் எதிர் சேகுத் தம்பி) என்பதன் மூலம் படிப்படியான அபிவிருத்திக்கு உட்பட்டது".

கோடீஸ்வரன் எதிர் சட்டமா அதிபர் (1969)72 N.L.R 337 at p 342

உரோமன் டச்சுச் சட்டம் இலங்கையில் பொதுச் சட்டமாக உருப்பெற்றமையோடு தொடர்புறுத்தி மேலே தரப்பட்ட கூற்றை விமர்சித்து மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

8. கீழே தரப்பட்டவற்றில் ஏதேனும் **இரண்டினைப் (02)** பற்றி சிறுகுறிப்பெழுதுக.

(அ) காலணித்துவ காலப் பகுதிக்கு முன்னரான இலங்கையில் நீதி நிர்வாக முறைமை

ஆ) 1505-1832 காலப்பகுதியில் காலணித்துவ ஆட்சியாளர்களின் கீழ் இலங்கையில் நீதி நிர்வாக முறைமை

(இ) சுதந்திரத்திற்கு பின்னரான காலப்பகுதியின் போது நீதிமன்ற மற்றும் நீதி நிர்வாக முறைமை

(10X2=20 புள்ளிகள்)